தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 மேழம் (20-4-1987) 85 காசுகள் (இதழ் எண்: 85)

அரசியல் சட்டம் புனிதமானதன்று; மக்கள் நலம் கருதுவதும் அன்று!

'மக்களுக்கு எதிரானதானல் சட்டப்பிரிவை மட்டும் அன்று சட்டப் பொத்தகத்தையே எரிப்போம்' என்றே இந்தியெதிர்ப்பாளர்கள் சொல்லியிருக்க வேண்டும்!



ம. உ. க. தலைவர் வழக்கறிஞர் பி. வி. பக்தவத்சலம் கருத்து

(அண்மையில் சட்டமன்றத்தினின்று பேரா. அன்பழகன் உட்பட வெளியேற்றப் பட்ட பத்து தி. மு. க. உறுப்பினர்களின் பதவி நீக்கத்தைச் சரியென்று கூறிய உயர்நெறி மன்றத்தின் தீர்ப்புப் பற்றி, மக்கள் நல உரிமைக் கழகத்தின் (Organisation for Civil and Democratic Rights) தலைவரும், மக்கள் உரிமைக்குப் போராடும் மிகச் சிறந்த வழக்குரைஞரும் ஆகிய திரு. பி. வி. **பக்தவத்சலம்** அவர்களின் கருத்தைக் கேட்டோம். அவர் கூறிய கருத்துகளை இங்கு தொகுத்துத் தருகிறோம்.)

கடந்த செப்டம்பர் மாதம் நடுவணரசிலிருத்து வந்த இந்திக் கிழமை(வாரம்) கடைப்பிடிக்க வேண்டிய கட்டளையைத் தொடர்ந்து, இந்தியெதிர்ப்பு வேகம் மக்கள் மனத்தில் மீண்டும் துளிர் விட்டது. அதைத் தொடர்ந்து தமிழ் மறவர்களின் போராட்டங்களும் அவர்களுக்கே உரிய பாணிகளி...

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

Scanned with CamScanner

ஐயோ தமிழகமே!

பேசாத பேச்சு!

அண்ணாவின் நினைவு நாளன்று நம் முதல்வர் தில்லிக்குச் சென்று, பாரதியார் சிலை திறப்பு விழா வேலைகளைக் கவனித்தார். அவர் அண்ணாவின் எந்த நினைவு நாளிலும் கல்லறை சென்று நினைவு கூர்ந்ததே இல்லை? இது வரலாறு. பாரதியார் சிலை திறப்பு விழாவில் அவர் பேசியதைத் தொலைக்காட்சியில் ஒலி ஒளி பரப்பினார்கள். அவர் என்ன பேசினார் என்று யாருக்குமே விளங்கவில்லை. இதன்வழி தமிழக மானத்தை உலக அரங்கில் வெளிப்படையாகவே விற்றுவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும். பேசாத செயல்படாத முதல்வரை வைத்துக் கொண்டிருக்கின்ற இளித்தவாயர்கள், அறியாமை மிகுந்தவர்கள், ஏமாளிகள் தமிழர்கள் என்று உலகம் ஏளனம் செய்யும் அளவிற்குத் தில்லி வரை சென்று நிறுவியிருக்கிறார் நம் தமிழக முதல்வர்.

—துரை. தென்னவன்.

பழனியாண்டியின் தொலைவரி.

"யாழ்ப்பாணப் பகுதிக்கு உணவு தேவைப் பொருள்கள் செல்லாமல் இலங்கை அரசு தடையிட்டிருப்பதும், அதன் கொடிய படைத்துறை நடவடிக்கைகளும் இந்தியாவின் அமைதி முயற்சிகள் இலங்கைக்குப் பிடிக்கவில்லை என்பதையே காட்டுகின்றன. உடனடியாக இந்தியா விரைவாகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" — இவ்வாறு இராசீவுக்குத் தொலைவரி கொடுத்திருக்கிறார் பழனியாண்டி. இது மெய்யான உணர்வென்றால் இதற்கு இராசீவ் செவி சாய்க்காத நிலையில் தேசியப் பிடிப்பை அவர் விட்டுவிடுவாரா? இல்லையேல் 'ஆடு நனைவது கண்டு அழும் ஓநாய்' போல இருந்து விடுவாரா?

நினைப்பதும் நடப்பதும்

தெலுங்கு கங்கை வாராதா? சென்னை மக்கள் தீராத வேட்கையுடன் குடிநீரை எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். இதோ, இதோ என இருவிரல் காட்டுகிறார் தமிழக முதல்வர்; ஆனால் ஆந்திர மாநிலப் பொருள் துறை அமைச்சர் சீனிவாசலு(ரெட்டி) உண்மையை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்: "தெலுங்கு கங்கைத் திட்டத்திற்குப் பொருள் துணை அளிக்க எம்.சி.ஆர். மறுக்கிறார்; அவர் நடுவணரசுக்கு மிகவும் அஞ்சுகிறார்(!) இப்போக்கின் விளைவை அவர் சந்திக்க நேரும்! தமிழக மக்கள் அவரை மன்னிக்க மாட்டார்கள்." தமிழக மக்களின் வேட்கையை இங்குள்ளவர்களை விட ஆந்திர பணத்துறையமைச்சர் உண்மையிலேயே அதிகமாகவே தெரிந்து வைத்துள்ளாரோ?

—வணங்காமுடி.

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கின் வரவு செலவுக் கணக்கு

வரவு	உரு.
1. அன்பர்கள் தாமாக விரும்பி விடுத்த வகையில் வந்த நன்கொடை. (12-10-86 முதல் 28-2-87 வரை)	10,679-40
2. செயற்குழு உறுப்பினர்களும் தொண்டர்களும் சென்னைத் தெருக்களில் உண்டியல் வழித் தண்டிய வகையில்.	747-75
மொத்த வரவு.	11,427-15

கல்லை. அருட்செல்வன்.
பொருளாளர்.

குணத்தொகையன்.
கணக்காய்வர்.

பெருஞ்சித்திரனார்.
அமைப்பாளர்.

செலவு	உரு.
1. பெரியார் திடல் அரங்கத்திற்கான வாடகை, தண்ணீர், மின் கட்டணம் ஆகியவற்றுக்கான செலவு	1,631-50
2. செய்தியாளர் கூட்டச் செலவு.	524-90
3. அறிக்கைகள், மடல்கள், சுவரொட்டிகள், உறைகள், ஒப்போலைகள், மார்பொட்டிகள், ஆகிய வகையில் ஆன அச்சுச் செலவுகள்.	2,855-95
4. போக்குவரத்து	44-90
5. அஞ்சல் செலவு	515-05
6. தொண்டர்கள், பணியாளர்கள், உணவு வகைச் செலவு	313-20
7. விளம்பர வகைச் செலவு	1,302-95
8. அலுவலகப் பொருள்கள்	72-80
9. தங்குமனைச் செலவு	25-00
10. ஒளிப்பட வகைச் செலவு	150-00
11. பிற சில்லறைச் செலவு	10-00
12. உ. த. மு. க. இயக்க வரவாகக் கொண்ட தொகை.	3,980-90
மொத்தம்	11,427-15

Scanned with CamScanner

சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தென்மொழி மா. பூங்குன்றன்

துணையாசிரியர்கள்:
தென்மொழி. கலை. அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு:
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. பா. சித்திரச் செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காளூர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
மா. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:
பாவலர். கடலூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். தெ. செ. சின்னப்பனார்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து,

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்.

அச்சீட்டாளர்:
தாமரை பெருஞ்சித்திரனார்.
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச் செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:
தென்மொழி. நீ. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி.த. அரிமாவளங்கோ,
எசு. ஆர். எசு. பிரான்சிசு,
தென்மொழி. ஆறிறைவன்.

கட்டணம்:

	உள்நாடு	வெளிநாடு வான்	வெளிநாடு கடல்
தனியிதழ்	0-85	6-00	4-00
ஆண்டுக் கட்டணம்	44-00	320-00	220-00
அரையாண்டுக் கட்டணம்	22-00	160-00	110-00
வாணாள் உரு.	750	5000	3500

தொடர்பு முகவரி:
தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்; எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

தி. பி. 2018 மேழம் (20-4-1987) இதழ் எண்-85

இந்தியாவின் ஓரவஞ்சனை

அண்மையில் கொழும்புவில் விடுதலைப் புலிகள் இயங்கிக் குண்டு வெடிப்பு நிகழ்ச்சி ஒன்றையும், அதற்குச் சில நாள்களின் முன்னர் வழிப்போக்கர் பேருந்துகளை நிறுத்திச் சிங்களர்களைச் சுட்டுக் கொன்ற நிகழ்ச்சியையும் நடத்தினர் என்பதற்காக, இந்திய அரசு அவர்களுக்குக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தது. அத்துடன், அந் நிகழ்ச்சிகளால் சேதமுற்ற இடங்களையும், கொல்லப்பட்ட பிணங்களையும் தொலைக்காட்சியிலும் போட்டுக் காட்டி, மக்களுக்கு விடுதலைப் போராளிகளின் மேல் வெறுப்பு ஏற்படும்படி செய்தது. இதற்கு முன் சில நேரங்களிலும் இவ்வாறு விடுதலைப் போராளிகளால் சிங்களர்க்கு நேர்ந்த அழிவுகளை ஓரிரண்டு முறை வெளிப்படுத்திக் காட்டித் தமிழீழ விடுதலைப் போராட்ட முயற்சிகளைப் பெரிதும் கொச்சைப் படுத்திக் காட்டியுள்ளது இந்திய அரசு. ஆனால் இது வரை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்றும், பல நூற்றுக் கணக்கான தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துச் சிதைத்தும், ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களைச் சிறையிலடைத்து உறுப்புச் சிதைவு செய்தும் வருகின்ற செயவர்த்தனே சிங்கள அரசை எந்தச் சூழ்நிலையிலும் ஒரு சிறு அளவில் கூட கண்டித்ததோ, அக் கொடுமைகளைச் சுட்டிக் காட்டியதோ இல்லை. ஓரிரு முறை வருத்தம் தெரிவித்ததோடு சரி. ஏன் இவ்வாறு இந்தியா ஓரவஞ்சனையுடன் நடந்து கொள்ள வேண்டும்? இஃது அரசியல் கொடுமையன்று; இனவியல் கொடுமை என்பது இதுதான்.

இராசீவ் காந்திக்கும் செயவர்த்தனேவுக்கும் தமிழினம் அடிமைப் பட்டே கிடக்க வேண்டும் என்பதுதான் கருத்து. ஏனெனில் இருவரும் ஆரிய இனத்தவர். ஆட்சியைக் கைப்பற்றிய ஆரிய இனம் ஆண்டு கொண்டே இருக்க வேண்டும் என்பதுவே அதற்குள்ள கொள்கை. ஆட்சியுரிமையில் தங்களுக்கும் பங்கு கேட்பதால் தமிழினத்தின் மேல் அவ்வினத்திற்கு வெறுப்பு. அதை எவ்வாறேனும் அடக்கி ஒடுக்கி விட வேண்டும் என்றே இருவரும் நினைக்கின்றனர். இல்லையானால் எவ்வாறேனும் அழித்து விட வேண்டும் என்றே முனைகின்றனர். அண்மையில் செயவர்த்தனே இதை வெளிப்படையாகவே சொல்லியுள்ளார். 'இலங்கையில் தமிழினத்தைப் பூண்டோடு அழிப்பதுவே என் நோக்கம்' என்று தெரிவித்திருக்கிறார். இராசீவ் காந்தி இவ்வாறு வெளிப்படையாகக் கூறவில்லையேனும் அவரின் மனக் கருத்து இதுதான்.

தமிழினத் தலைவர்கள் இன்னும் செயவர்த்தனேவையும் இராசீவ் காந்தியையும் நம்பிக் கொண்டிருப்பதுதான் நமக்கு வியப்பினும் வியப்பாயிருக்கிறது. இவர்களின் ஓரவஞ்சனையையும் உள்ளக் கரவையும் தெரிந்து கொண்டால், தமிழினம் ஒன்றுபட வாய்ப்பிருக்கிறது. அது நடக்குமா? 0

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தமிழகமெங்கும் நடந்தேறியதும், சட்ட எரிப்புப் போரில் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சட்டத்தின் 17-ஆவது பிரிவை எரிப்பதாகக் கூறி, இறுதியில் இந்தியெதிர்ப்பு வாசகம் ஒன்றை எழுதிய தாளைக் கொளுத்தியதும் அதைத் தொடர்ந்து ஏறத்தாழ இருபதாயிரம் தி. மு. க. தொண்டர்களும் தலைவர்களும் சிறைப்பட்டதும் தமிழகம் அறிந்தவையே.

மக்களுக்கு எதிரான இந்தித் திணிப்புக்குச் சட்ட வாசகத்தை எரித்து எதிர்ப்புக் காட்டிய போராட்டத்தினால், தமிழக அரசை ஆளும் கொடுமுறை(பாசிச)க் கும்பலின் அதிகாரத் திமிரை வெளிச்சம் போட்டுக் காட்ட மீண்டும் ஒரு வாய்ப்பாக அமைந்தது.

மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்புறுதி (பதவிப் பிரமானம்) எடுக்கும்போது இந்த அரசியல் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்று வாயுறுதி கொடுத்த காரணத்தால், இவர்கள் சட்டப்படி குற்றவாளிகள் எனக்கூறி, அவர்களைப் பதவி நீக்கம் செய்து, இந்திய அரசியல் சட்டத்தின் 'புனிதத்தை'(!)க் காத்த பெருமை கொடுமுறையாளர் (Fascist) பாண்டியனையே சாரும்.

மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு, பாடுபட்டுக் காத்துவரும் அரசியல் சட்டத்தின் புனிதத் தன்மையை—மரபைப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. (இந்திய) மக்களால், மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள், நம்மை அடிமைப் படுத்திச் சுரண்டிச் சேர்க்க வந்த கூட்டத்தால் அமைக்கப்பட்ட சட்டத்தைத்தான்—வசதிக்கேற்ப எத்தனையோ முறைகள் (ஏறத்தாழ 35 முறைகள்) இவர்களாலேயே ஒட்டியும் வெட்டியும், திருத்தியும் சுருக்கியும் எழுதப்பெற்ற இப்பொழுதுள்ள அரசியல் சட்டத்தைத்தான—இந்த நயவஞ்சகர்கள் புனிதமானது என்று கூக்குரலிடுகிறார்கள்.

மக்களுக்கான அரசியல் சட்டம் எனில், அது பெரும்பாலான மக்களின் நலனை எதிரொலிப்பதாகவும், அவர்களுடைய வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் வழிவகுப்பதாகவும் இருக்க வேண்டும். ஆனால் இங்குள்ள நிலைமையோ அப்பட்டமாக வேறானதாகும். தொடர்ந்து இவர்கள் நலன்கள், பாதுகாப்பு, வளர்ச்சி என்றெல்லாம் சொல்லிக் கொள்வது, ஆங்கிலேயர்களுக்கு அடுத்து வந்து, ஆட்சியைப் பிடித்துக் கொண்டு, அதே வகையில் சுரண்டல் பணியை மேற்கொள்ளும் 'கடமையாளன்'களுக்காகத்தான்! ***இந்த வகையில் எல்லாவகையான ஓட்டைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்திய அரசியல் சட்டந்தான் எரிக்கப்பட்டது.***

இங்கு இன்னோர் உண்மையையும் நாம் கூற வேண்டியுள்ளது. இந் நிலையில்தான் நம் 'தமிழ் மறவர்'களின் வீரத்தையும் நம்மால் காண முடிந்தது. "நாங்கள் எரித்தது இந்திய அரசியல் சட்டத்தை அன்று; 17-ஆவது பிரிவை எழுதிய வெள்ளைத் தாளைத்தான்" என்று பெரிதாக ஒரு 'காரணம்' அடித்தனர், அதை எரித்தவர்கள்! மக்கள் நலன் நோக்கி இதைச் செய்வதாக இருந்திருந்தால், **சட்டம் மக்களுக்கு எதிரானது என்றால், 17-ஆவது பிரிவை மட்டுமென்ன, முழுச் சட்டப் பொத்தகத்தையே எரிப்போம்'** என்றன்றோ அதை எரித்தவர்கள் சொல்லியிருக்க வேண்டும்.

ஆனால், தொடக்கத்திலேயே, 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' என்றும், 'அடைந்தால் திராவிட நாடு; இல்லையேல் சுடுகாடு' என்றும் முழங்கியவர்கள், 1962-இல் பிரிவினைத் தடைச் சட்டம் வந்ததெனக் கூறி, அந்தக் கொள்கையைக் காற்றோடு பறக்கவிட்டு விட்டார்களே. மேலும் 1967-இல் ஆட்சி நாற்காலிக்கு வந்தவுடன், நடுவில் இந்திராவுடன் கூட்டுவைத்துக் கொண்டார்கள். (எப்படியாவது ஆட்சியில் நிலைக்க வேண்டும் என்கிற ஆசைதானே!) அந்த நாள்களில் இந்தித் திணிப்பைக் கொண்டு வருவதில் முதலும் முழுமையுமாக இருந்த இந்திராவைத்தானே இந்த 'இந்தி எதிர்ப்பாளர்கள்', '**நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக!**' என வாழ்த்தி நின்றார்கள்.

இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர்கள் வீரஞ் செறிந்த போராட்டங்களை நடத்திய பொழுதெல்லாம், 'மாணவர்களே நீங்கள் வகுப்பறைக்குச் செல்லுங்கள்; நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்!' என வஞ்சகம் பேசி, அதன் போராட்ட முனைகளை மழுங்கடித்தவர்கள், இவர்கள். இவ்வாறு மக்களின் சிறந்த உணர்வுகளை மிகக் கீழாக ஆட்சியைப் பிடிக்கப் பயன்படுத்திக் கொண்டதுதான் இவர்கள் வரலாறு.

இப்படி அங்கும் இங்கும் ஓடித்திரிந்து, மக்களை அயர வைத்து ஆட்சியைப் பிடிக்கும் இவர்கள் போட்டியிடுவது நடுவிலும் மாநிலத்திலும் உள்ள கொடுங் கொள்கையாளர்களுடன்தாம்! ஆனால் நடுவிலோ வரவு செலவுத் திட்டச் செய்தியிலிருந்து, தலைமையமைச்சர் தம் உடன் அமைச்சர்களுடன் வைத்துக் கொள்ளும் உறவுகள், இதழ்த்துறை உரிமையைக் காலில் போட்டு மிதிக்கும் செயல்கள் அனைத்தும் கொடுமை (பாசிச)ப் போக்குகளையே வெளிச்சமிட்டுக் காட்டி வருகின்றன.

மாநிலத்திலோ, அதன் சட்டமன்றத்திற்கே உரிய பரபுநிலைகளோடு, ஊரறிந்த அரம்பர் (ரவுடி)களை ஆளும் அமைச்சர்களாகக் கொண்டு

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

சாறு-சுரண்டல் கூட்டத்திற்கு! சக்கை-உழைக்கும் மக்களுக்கா?

இந்திக்காரன்கள் கொழுக்க நாம் ஏன் உழைக்க வேண்டும்?

—சிறிதும் சோர்வில்லாமல் நாள் முழுக்க உழைத்து விளைச்சலைப் பெருக்குகிறோம்.

—விளைவித்த நெல் மணிகளை, பயிர்களை, காய்கறி-களை, பழங்களை நாம் சுவைத்தாவது பார்த்தோமா?

—அழுகிய வீணான உணவுப் பொருள்களையே நாம் சாப்பிடுகிறோம்

—ஏன்—எதற்காக நாம் உழைக்க வேண்டும்?

—எதற்காக நாம் வாழ்கிறோம்?

—நம் உழைப்பால் விளைந்த விளைச்சலை இன்-னொருவன் வயிறு பெருக்கச் சாப்பிட, நாம் மட்டும் ஏன் உழைக்க வேண்டும்?

ஒட்டிய வயிறு இங்கே இருக்க,
உழைத்த செல்வம் எங்கே போகிறது தெரியுமா?
இந்திக்காரன்களுக்கும்,
மார்வாடி சேட்டுகளுக்கும்,
பணக்கொழுப்புப் பிடித்த இந்திய,
தமிழக முதலாளிகளுக்குமே!

O நகரங்களில் அயிரம்(கிலோ) 3-உருபாவுக்கு விற்கப்படுகிறது தக்காளி. ஆனால் விளைவித்த நமக்குக் கொடுப்பதோ வெறும் 10 காசுகளே!

O தேங்காய்க்கு வெறும் 75 காசுகளே நமக்குக் கிடைக்கிறது. ஆனால் 75-காசுகளுக்கு வாங்கும் மார்வாடி, இதை நான்கு உருபாவுக்கு இந்திக்காரனுக்கு அனுப்பிக் கொள்ளை வருவாய் அடைகிறான்.

O இவ்வாறு இங்கு மாடாய் உழைத்து, ஓடாய்த் தேய்ந்து விளைவித்த நெல்லுக்கு விலை குறிப்-பவன் எங்கோ ஆயிரம் கல்லுக்கு அப்பால் ஆடம்பர வாழ்க்கை வாழும் இந்திக்காரன்.

—இதனால்

∵ நாம் உழைத்து உழைத்து ஒட்டாண்டிகளாக மாறுவதும்,

∵ வாங்கிய கடனுக்கு, வட்டியே நம்மை விழுங்குகிற படியாகக் கடன் தொல்லைகளுக்கு உட்படுவதும்,

∵ மழையிலும் வெய்யிலிலும் வாடி வதங்கி வேலை செய்ய வேண்டியே நாம் அடிமைப்படுத்தப் படுவதும்,

—என்றைக்கு நிறுத்தப்படும்?

—விலங்குகளைப் போல் இல்லாமல் மக்களாய் நாம் வாழ்வது எப்போது?

∵ இந்தப் பணக்கொழுப்பெடுத்த இந்திய முத-லாளிகள் ஏய்த்துப் பிழைப்பதற்காக நாம் உழைத்துப் போடும் ஏமாளித் தனத்தை நிறுத்தி நம் விளைச்சலை அவன்களுக்குக் கொடுக்காமல் நமக்காக ஆக்கும் நாளே—

∵ நாம் விளைவித்த பொருளுக்கு நாமே விலை குறித்திடும் நிலை வரும் நாளே—

∵ பசுமைப்புரட்சி — என்று கூறிச் செயற்கை உரத்தைப் போட்டு மண்ணைப் பாழாக்குகிறார்கள்.

செயற்கை உரங்கள் போடப்பட்ட நிலம் சிறிதும் பயன்படாமல் நாளடைவில் உரம் போடாமல் ஏதும் விளையாமல், சக்கை உணவுப் பொருளையே கொடுக்கும்,

குமுக நலக் காடுகள்—என்று யூக்லிப்டசு, கருவேலம், சாலி மரங்களை வளர்ப்பதோடு, காடு-களை அழிக்கின்றனர்.

இந்த யூக்லிப்டசு, கருவேலம், சாலி மரங்கள் நிலத்தடி நீரை உறிஞ்சிப் பிற பயிர்களைத் தம் காட்டில் வளர விடாமல் நிலத்தையே வற்ற வைக்கின்றன. இதனால் ஏரிகள் காய்ந்து போகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன.

தாள்கள் செய்து முதலாளிகளுக்கும், அரசுக்கும் கொழுத்த வருவாய் கிடைக்க வேண்டிப் பயிரிடப் படும் கருவேலம், யூக்லிப்டசு, சாலி மரங்களால் மழை பொழியாமல் நாடே பாலை நிலமாக மாறுகிறது. இதனால் வேளாண்மை செய்வோர் நகரை நோக்கி ஓடிச் சென்று கூலி வேலை செய்து பிழைத்து ஒட்டாண்டிகளாகின்றனர்.

—இந் நிலைகள் அடியோடு மாற, இயற்கை உரங்களைப் போடுவதோடு நிலத்தை வற்ற வைக்கும் பயிர்களான கருவேலம், சாலி, யூக்லிப்டசு மரங்களை வளர்க்காமல் வெட்டி வீழ்த்துவதோடு காடுகளை வளர்த்து நிலத்தைச் செழுமைப் படுத்தும் நாளே—

—நாம் மக்களாக வாழும் நாளாகும்.

எனவே, தமிழ் நாட்டு உழவர்களே!

நம் உழைப்பை நம் தமிழக மக்களுக்காக ஆக்குவோம்!

நம் விளைச்சலை நம் உழைக்கும் தமிழக மக்களோடு பகிர்ந்து உண்போம்!

நம் உழைப்பையும், விளைச்சலையும் நமக்காகச் செய்வோம்.

இந்த இந்திய, தமிழக முதலாளிகளைப் புறக்கணிப்போம்!

தமிழக மக்களுக்காக நாம் வாழ்வோம்!

தமிழ்நாட்டு விளைச்சலைத் தமிழ்நாட்டு மக்களுக்காகச் செய்வோம்!

—தமிழ்நாடு உழவர் பேரவை.

Scanned with CamScanner

(முன்னிதழ்த் தொடர்ச்சி) தொடர்—2

மெரீனு முதல் மருதையாறு பாலம் வரை

-- இரணியன்.

உண்மையிலேயே இவர்கள், குறிப்பிட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தாமா என்பதைப் பொதுநிலை மக்கள் அறிந்து கொள்ள முடிவ- தில்லை.

மற்ருெரு சாரார், விடுதலை இயக்கங்களுக் குள் ளேயே ஊடுருவினுர்கள். இயக்கங்களுக் கிடையே பகைமையை விதைத்தார்கள்! மோதலை வளர்த்தார்கள்! ஈழ மண்ணிலும் மக்கட்பகை நட வடிக்கைகளை மேற்கொண்டார்கள்! ஈழவரே ஈழப்போரை வெறுக்கும் நிலையை மெல்ல மெல்ல வளர்த்தார்கள்!

இந்தியாவில், ஈழப்போரைக் கொச்சைப் படுத்தும் இயக்கங்களுக்கெல்லாம் பண உதவி செய் தார்கள். ஈழப்போருக்கு எதிராக எழுதும் இதழ்க- ளுக்கு அருட்கொடை செய்தார்கள்!

இவர்களால், காவல்துறை உயர் அதிகாரி- கள் பலர் பெருஞ்செல்வர்கள் ஆயினர்! ஈழ விடு தலை இயக்கங்கள் இந்தியாவின் கிடுக்கிப் பிடிக் குள் இருந்ததனுல், இக் காவல்துறை உயர் அதி காரிகள், விடுதலை இயக்கங்கள் பற்றியும் போராளிகள் பற்றியும், ஏராளமான துப்புகளைப் பெற்றுச் சிங்கள அரசுக்குக் கொடுத்து, நற்பெய ரும் நன்கொடையும் பெற்றனர்! இவர்களின் நட வடிக்கைகள், இந்தியாவின் அரச விரகிற்கே (தந் திரத்திற்கே) மாருக அமைந்தவை என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்

இந்த அதிகாரிகளின் நடவடிக்கைகள், ஐயத் திற்கிடமின்றி "இந்திய எதிர்ப்பு" (இந்திய விரோத) நடவடிக்கைகளே ஆகும்

ஆனுல், இந்தியப் பகைச் செயலில் ஈடுபட் டும், இவர்கள் எந்த மினுக்கும் குறையாமல் நட மாடுவது எப்படி?

அதற்குக் காரணம், தமிழ்நாட்டரசு இந்த வஞ்சகர்களின் பாதுகாவலனுகச் செயல்பட்டது தான். இந்த வஞ்சகர்களின் இரண்டகங்கள் யாவும் தமிழ்நாட்டரசால் முழுமையும் மறைக்கப் பட்டன!

தான்தோன்றித் தனமும், செருக்கும், மக்கள் நேயமின்மையும், பொதுநலமின்மையும், இனநல மின்மையும், அகம்பாவமும், அட்டுழியமும், வன்ம மும், தன்னலமும் ஒன்று திரண்ட ஒருருவம் முத லமைச்சுக் கட்டிலில் நீடிப்பதால், இந்த வஞ்சக அதிகாரிகளின் அழிம்புகள் இந்திய அரசுக்கே தெரியாமல் மறைக்கப்பட்டன.

இந்திய அரசுக்குத் தமிழர்மீது எந்த அக் கறையும் இருக்க வாய்ப்பில்லையெனினும், சில புறச் சூழல்களால் சிங்கள அரசுக்குத் தலையிடி கொடுக்க வேண்டிய தேவையும், அதற்காக ஈழப் போராளிகளுக்குப் புகலிடம் நல்க வேண்டிய கட் டாயமும் இந்திய அரசுக்கு ஏற்பட்டன. அந்த இந்திய அரசுக்கும் இவர்கள் இரண்டகம் புரியலாயினர்!

இவர்களின் உதவியுடன், சிங்கள, இசரேலிய, சி.ஐ.ஏ. சூழ்ச்சிக் கும்பல்கள் மேலும் திறம்படத் தமிழகத்து மண்ணில் செயல்படத் தொடங்கினர்!

தமிழக மக்களின் அமைதியான வாழ்வுக்கு ஊறு விளைவிக்க வேண்டும்! அதைச் செய்தவர்- கள் ஈழப் போராளிகளே என்று மக்கள் எண்ண வேண்டும்! இதுவே இவர்களின் திட்டம்.

இதன்படிதான், வெடிகுண்டு நிகழ்ச்சிகள் தமிழ் மண்ணில் நடந்தேறத் தொடங்கின. மெரீனுக் கடற்கரையில், திரு. மு. கருணுநிதி பேசிய கூட்டத்தில் இக்கும்பல் வெடிவைத்த போது, கருணுநிதி அவர்களே "தமிழீழ விடுதலைப் புலி"களின் மீதுதான் ஐயப்பட்டார் என்ருல், இவர்களின் எண்ணம் எவ்வாறு வெற்றிகரமாக ஈடேறத் தொடங்கியது என்பதை விரித்துரைக்க வேண்டியதில்லை.

பின்னர் நடந்த வெடிவைப்புகள் எல்லாவற்றி லும் ஈழப் போராளிகளே ஐயத்திற்கு உட்பட்டனர். அவர்கள்மேல் ஐயம் வரும்படியே காவல்துறையின் செயற்பாடு, அதன் மேலதிகாரிகளால் முடுக்கி விடப்பட்டது.

ஆழ்ந்து சிந்தித்துப் பழக்கமில்லாதவர்களும், பன்னுட்டரசுகள், நம் நாட்டரசுகள் ஆகியவற்- றின் சூது வழக்குகளை அறியாத பொது மக்களும் கைக்கூலிகள் சொன்னதையெல்லாம் நம்பினர்! விளைவு, தமிழர் நல அமைப்புகளும், தமிழ்நாட்டு மக்களும் ஈழவிடுதலைப் போராளிகளிடமிருந்து ஒதுங்கிச் செல்லத் தொடங்கினர்! ஈழ விடுதலை யின்மீது உள்ள நேயத்தைத் தளரவிட்டனர்.

இக் கட்டத்தில்தான் ஒரு கொடுமை நிகழ்ச்சி நடந்தது. அதுவே அரியலூர் அருகே நிகழ்ந்த தொடர்வண்டித் தகர்ப்பு.

திருச்சியை நோக்கி வந்துகொண்டிருந்த மலைக் கோட்டை விரைவு வண்டியின் பாதையைத் தகர்த்து, வண்டியைக் கவிழ்த்தனர்! ஏராளமான மக்கள் கொடிய சாவைத் தழுவினர்! கைகால் சிதைவுற்ருேரும், கடுமையான காயம் பட்டோரும் அளவற்ருேர்!

இத் தகர்ப்பு ஒரு திட்டமிட்ட சூழ்ச்சி! மக்கள் ஏறிச் செல்லும் வண்டியைத் தகர்க்கவே சூழ்ச்சி செய்து, எண்ணத்தை நிறைவேற்றியிருக்கிருர்- கள் எனத் தெரிகிறது.

(தொடரும்)

Scanned with CamScanner

அரியலூர் தரும் அதிர்ச்சிகள்!

இன்றைக்கு ஆளும் வெறியர்களின் நலன்களுக்காகவே ஆட்சி நடத்தப்படுகிறது. இ'து இன்றைய அரசியல் நாடகத்தில் பல்வேறு வகைகளில் உறுதி செய்யப்பட்டாலும், அரியலூர் நிகழ்ச்சி நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

தமிழகத்தை, தமிழ்நாட்டு விளைச்சல்களை இந்திய அரசிடம் வாரிக் கொடுத்துவிட்டுத் துண்டு விழும் நலன்களை நத்திப் பிழைப்பதற்காகவே ஆட்சி நடத்திடும் இந்த அரசு, எப்படி உண்மையில் இத் தமிழக மக்களின் மீது நலன் காட்ட முடியும்?

கரும்பு, வாழை விளைச்சல்களை அதிகப்படுத்தி அதன் வழிச் சருக்கரையையும், வாழைப் பழத்தையும் உருசியாவிற்கு ஏற்றுமதி செய்கிறது. குறைந்த அளவு சருக்கரை தமிழ் நாட்டில் உருவாக்கப்பட்ட போதும் ஓர் அயிர எடை(கி. கி.) உரு. 6-50-தான்; இன்றைக்குப் பல மடங்கு அதிகமாக உருவாக்கப் படுகிற பொழுதும் அயிர எடை உரு. 6-50-தான். ஆனால் உருசியாவிற்கு, இந்தியா அயிர எடை 90-காசுக்கு அனுப்ப தமிழ் நாட்டுச் சருக்கரையை வாரிக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றது.

யார் அப்பன் வீட்டுப் பொருள் பறிபோகிறது?

—நெய்வேலி நிலக்கரி,

—நரிமணம் கன்னெய்(Petrol),

—தூத்துக்குடி முத்து,

—எண்ணூர், மேட்டூர், கல்பாக்கம், நெய்வேலி—இடங்களின் மின்சார உருவாக்கம்,

—சிவகாசி அச்சு, வெடிபொருள்,

—கோவை பஞ்சாலை, துணி உருவாக்கம்.

இவையனைத்தும் இந்தியர்களால் நாளும் சுரண்டப்பட்டுக் கொண்டு போகப் படுகின்றன!

இங்கிருக்கிற ஏழைத் தமிழன் வாழ்க்கை...!

இப்படிப்பட்ட அங்காந்த நிலையின், ஏமாறிய நிலையின் இடையில்தான் அரியலூர் நிகழ்ச்சி.

மக்கள் வாழ்க்கைக்கே தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிற இவ் விக்கட்டான சூழலில் மக்கள் எங்கும் அச்சத்தோடே செல்லுகிற வகையில் வெடி விளையாட்டுகள்!

எங்குப் பார்த்தாலும் வெடிகள்!

மக்களைக் கொல்லும் பகுதியினர் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றனர்.

இந் நிலையில் இம் மக்களின் விடிவுக்காக, வாழ்க்கைக்காகப் போராடுவதாகக் கூறும் குழுவினர்களும் இது போலும் நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது அதிர்ச்சியையே தருகிறது.

ஊரை அடித்து உலையில் போடுவது அன்று புரட்சி!

எப்பொழுது விளக்கு அணைக்கப் பெறும் என ஏங்கிக் கிடக்கும் 'கருப்புப் பூனைகள்!' சுற்றிச்சூழ நடந்து கொண்டிருக்கும் வெள்ளை ஆளும் பூனைகளோ, என்றைக்கு-எப்பொழுது இந்த மக்கள் 'கண்ணயர்வர் சுரண்டலாம்' என்றே பார்க்கின்றனர்.

இதைச் சுட்டிக் காட்டப் புகுகின்றோர், மக்கள் பகைவர்களாகிவிடக் கூடாதே.

அரியலூர் நிகழ்ச்சியைப் பொறுத்த அளவில் நெய்வேலிக்கு வரும் இராசீவ் காந்தி, திருவரங்கம் குடநீர்த்தெளிப்பு நிகழ்ச்சிக்கு வரும் வெங்கட்டராமன் ஆகியோர் கவனத்தை ஈர்ப்பதற்காகவே செய்யப் பெற்றதாக அறிவித்திருக்கும் 'தீவிரப் பொதுவுடைமை இயக்கத்தினர்', மருதைப் பாலத்தை 3-40-இற்கே வெடிவைத்துத் தகர்த்ததாக அறிவித்திருக்கின்றனர்.

அப் பகுதிவாழ் மக்களும் அவ் வெடிப்பொலி கேட்டு அருகிலிருந்த தொடர்வண்டி நிலையத்தில் அறிவிப்புச் செய்திருந்திருக்கின்றனர்.

('இந்து'—நாளிதழ்—22-5-'87)

ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் மலைக்கோட்டை விரைவு வண்டி வர இசைவளிக்கப் பட்டிருக்கிறது.

மேற்கொண்டுவரும் வண்டியைத் தடுத்து நிறுத்த எங்களால் இயலவில்லை என்றும், அப்படி நாங்கள் 1956-இல் செய்ததற்காகவே நாங்களே ஐயப்பாட்டின்கீழ்த் தளைப்படுத்தப் பெற்றோம்-என்றும் அவ் வூர் மக்கள் அறிவித்திருந்திருக்கின்றனர்.

('இந்து'—நாளிதழ்—22-3-'87)

இந் நிலையில்தான் மலைக்கோட்டை விரைவு வண்டி 4-40-மணிக்கு அவ்வுடைந்த பாலத்தின்மீது வந்து வீழ்ந்து போயிருக்கிறது.

மேலும் அன்று விடியலே, வண்டி வீழ்ந்து மிகு குறுகிய நேரத்திலே நடுவண் அரசு அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அங்கு வந்து சேர்ந்தது மிகு வியப்பானதே!

திரு. ப. சிதம்பரமும், பழநியாண்டியும் எந்த நோக்கத்தில் கடைசி நேரத்தில் தங்கள் சுற்றுச் செலவைத் தடை செய்து கொண்டனர் என்பது கேள்விக் குறியே!

மேலும் சிதைவுற்ற முதல் வகுப்பின் பெரும் பகுதி மக்கள் உடலங்களின் மீது எவ்வகை நகைகளையோ அவர்களின் உடைமைகளையோ விட்டு வைக்கவில்லை காவல்துறை.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

உயிர் பிழைத்த முதல் வகுப்புப் பயணி ஒருவர் வைத்திருந்த உரு. 25,000-தொகை காணவில்லை. இப்படிப் பல்வேறு இழப்புகளை ஊதியமாக உட்கொண்டனராம் காவல் துறையினர்.

உயிருடன் வாழும் மக்கள் நலனுக்குக் காவல் செய்ய வேண்டிய துறையினர், இறந்த உடலங்களின் மீதிருந்த உடைமைகளைக் கவர்ந்து கொண்டு, அவ் உடலங்களைக் காவல் செய்து கொண்டிருந்திருக்கின்றனர்.

இப்படி மக்கள் வாழ்க்கை என்பதே அரிதாகப் போய்க் கொண்டிருக்கிற இக் கொடிய ஆளும் பிரிவினரின் சுரண்டலுக்கு இடையில்...

வருத்தமான ஒரு படத்தில் ஏற்படுத்துகிற நகைச் சுவை போன்று, இவ் வழிவு நிலை நிகழ்ச்சிக்கு இடையில் தம் பார்ப்பனிய நச்சுக் கருத்தால் நகைப் பூட்டியிருக்கிறார் நடுவண் அரசு அமைச்சர் ஒருவர்.

அரியலூர் பாலத்தின் அருகில் ஏதோ கெட்ட ஆவி சுற்றிக் கொண்டுள்ளதாம். அதனால்தான் இப்படிப்பட்ட இழப்புகள் நேரிடுகின்றனவாம். எனவே அங்கு வேள்வி செய்ய வேண்டுமாம். எப்படி...?

அரசை, மக்களை—அனைத்தையும் வீழ்த்தித் தன் பாதத்தில் விழ வைத்திருக்கும் பார்ப்பனியத்தின் சிந்தனை எப்படியுள்ளது!

'ஸ்ரீரங்க'த்தின் 'சம்ரோக்ஷன, — நிகழ்ச்சிக்கு அவாள்கள், வெங்கட்ராமன்களோடு இந்தத் திராவிட அடிமைகள் எம். சி. இரா., பண்ணுருட்டி இராமச்சந்திரன், அருணாசலம், சௌந்தரராசன், சாமிநாதன்-களோடு இளையராசா, கங்கை அமரன் களோடு 'தமிழினத் தலைவ'ராம் கருணாநிதியும் அன்பில் தருமலிங்கம் வழியாக ஈரிலக்க உருபா கொடுத்து அவாள்களிடம் 'ஆசி' பெற்றுக் கொண்ட தன்மையை என்னவென்பது!

அன்றைய இடைக்காலத் தமிழகத்தில்...,

இப் பார்ப்பனர்களின் சிந்தனைக்கு அடிமைகளான அரசர்கள் கட்டிய கோயில்கள் போன்று,

இன்றைக்கும் இப் பார்ப்பனர்களின் அட்டுழியத்தை என்னவென்பது!

—நூற்றுக் கணக்கான பட்டுச் சேலைகளும்,
—பல நூற்றுப் பதின(லிட்டர்) நெய்யும்,
—பல நூற்றுப் பதின எரி பொருள்கள்,
—தங்கம், வெள்ளி வைரங்கள் — எரிய எரித்த வேள்வி(யாகம்) போன்று, அந்த அரியலூரிலும் வேள்வி செய்ய வேண்டுமாம்?
—எப்படி இருக்கிறது.
—ஐயகோ தமிழா..., —உன்னை அடிமையாக்கித்தான் எத்தனை ஏய்ப்புகள் கண்டாய்?
—ஆர்த் தெழுவாய்!—இன்றே...

''மொழிக்கலப்பும் இனஇழிவும் பண்பாட்டு வீழ்வும்,
முழுஅடிமை அரசியலும் பொருளியலும் உன்னை
விழிக்கவிலா உறக்கத்தில் ஆழ்த்தியடி வீழ்த்தி,
விலங்குகளாய்ச் சமைத்தனகாண் உணர்கிலையே! தமிழா!

பழிக்கொருவ னாகினையே! விழிக்கிலையே இன்னும்!
பகையுணர்ந்தே நின்தடந்தோள் நிமிர்ந்தெழுவா யானால்,
அழிக்கலுறும் பெரும்பகையும் தூள்தூள் ஆகாதோ?
அதிர்ந்தெழுவாய், இமைதிறந்தே! அடலேறே! களிறே!''

-- விடுதலைவேட்பன்.

அமைதி கோழைத்தனம் அன்று! வன்முறை வீரம் அன்று!

தமிழகம் பெரும்பாலோர் தமிழ் மொழி பேசும் மாநிலமாகும். பல்வேறு மதத்தவர்கள் இங்கு வாழ்ந்தும் பல்வேறு மொழியினர் சிறுபான்மையினராக இருந்தும் எவ்வகை வேற்றுமையும் பாராட்டாமல் உறவுடன் வாழும் மாநிலங்களின் வரிசையில் முதலிடம் பெற்ற மாநிலமாகத் தமிழகம் அமைந்துள்ளது. இது பெருமைக்குரிய ஒன்றாகும். இங்குள்ள மக்கள் இயற்கையாகவே பரந்த, மற்றும் ஒப்புரவு மனப்பான்மை உள்ளவர்களாகவும், அமைதியான தன்மை உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாலும் இந்திய உரிமைக் காலத்தின் போதும், அதன் பிறகும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் மதவெறி தாண்டவமாடிய போதும், அரத்த ஆறுகள் ஓடிய போதும் இங்கு நிலவியிருந்த அமைதியைக் கண்டாலும் இத் தமிழகம் அமைதியின் எடுத்துக் காட்டாகவே காட்சியளித்தது புலப்படும். இது வரலாற்று உண்மையாகும். இங்குள்ள மக்களின் இந்த அமைதியான தன்மையைக் கோழைத்தனம் என்றும், அறிவின்மை என்றும் ஒரு சிலர் வண்ணிக்கலாம். அமைதியை விரும்புவது கோழைத்தனம் என்றும், வன்முறையை வீரம் என்றும் கருதுவது அறியாமையாகும்.

தமிழகம் மட்டுமல்லாமல், தென் இந்தியாவே அமைதியான பகுதியாகத் திகழ்ந்து வருகிறது. வடநாட்டின் வகுப்புக் கூற்றினர் இப் பகுதிக்கு வகுப்புப் பிரிவினையையும் வெறுப்பையும் நீண்ட காலமாக ஏற்றுமதி செய்து வருகின்றனர். இங்குள்ள சில குறுகிய கண்ணோட்டம் உள்ளவர்கள் அவர்களின் சூழ்ச்சித் திட்டங்களுக்கு ஆளாகி அவற்றை இறக்குமதி செய்தும் வருகின்றனர். ஆனாலும் இப்பகுதி மக்கள் வகுப்புணர்வை வெறுத்தும், ஒதுக்கியும் வருவதை மன நிறைவோடு பாராட்டுகிறேன். தமிழக மக்களிடையே நிலவும் இந்த நல்லுணர்வுத் தோழமை மேலும் மேலும் வளரும் என நம்புகிறேன்.

- மௌலானா அப்துல் அசீசு ரகமானி, (சமரசம்).

தென் திசையை நோக்கினர் பாவேந்தர்! இன்று வடதிசை வழிகாட்டுகிறது!

—ஆரியத்திடம், களப்பிரரிடம், இசுலாமியரிடம், ஆங்கிலேயரிடம் அடிமைப் பட்டதோடு, அடிமைப் பட்டிருப்பதோடு மட்டும் அல்லாமல்—

—இன்றைக்கு இந்திய வல்லாளுமை அரசுக்கும்,

—பன்னாட்டு மூலப் பணங்களுக்கும் அடிமைப் பட்டயம் எழுதிக் கொடுத்ததோடும் நில்லாமல்,

—தமிழ்த் தேசியத் முதலாளிகளுக்கும்,

—காட்டிக் கொடுக்கும் தமிழின இரண்டகர்களுக்கும் அடிமைப்பட்டுத் திரிகிற இத் தமிழ் நாட்டு மக்கள் தங்கள் அடிமைத் தளைகளை உடைத்தெறிந்து விடுதலை பெறுவதே இன்றைய முதல் வேலை.

அவ் வடிமைத் தளைகளிலிருந்து விடுதலை பெறப் போர்க்குரல் எழுப்பிய, எழுப்புகிற தந்தை பெரியார், பாவலரேறு பெருஞ்சித்திரனர் ஆகியோரின் கருத்துகளை ஏற்றும்—

—பல்வேறு கழகங்களின், கட்சிகளின், இயக்கங்களின், குறுங் குழுக்களின், படைகளின் செயல்பாடுகளை உள்வாங்கிக் கொண்டும் உறங்கிக் கிடக்கிறதே தமிழ்நாடு!

—இந்த இந்தியச் சிறையில் கட்டுண்டு கிடக்கும் வட தேசிய இனங்களான அசாம், பஞ்சாப், மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து, கூர்க்கு நாடு, காசுமீரம், அருணசலப் பிரதேசம் —இவை யாவும் எழுச்சி கொண்டு வினையாற்றிக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்டுமா இத் தமிழன் நீள் துயிலில் வீழ்ந்துள்ளான்?

—அதோ அந்த அசாமிய மக்களின் எழுச்சியுரை கேட்கிறது:

"எங்கள் குறிக்கோள் விடுதலையே! அவ் விடுதலையைப் பெற்றெடுக்க எங்கள் வழி கருவியேந்திய புரட்சியே! அதற்கான கருத்தியல் — அறிவியல் வழியான சமவுரிமை அரசே, அசாம் தேசிய இனத்திற்குப் பொருந்திய வகையிலானது".

—என்னே..., அந்த அசாமியத் தோழர்களின் வீறுரை! தெளிவுரை!

—என் அசாமியத் தோழர்களின் குருதி கொப்பளித்து வீறிடுப்! அவர்களின் வீர உணர்ச்சியின் உச்சி மோந்து மண்டியிட வேண்டும் போல் உள்ளது.

—எந் தமிழ் மக்களே...! உங்களின் அடிமைத் தளையை இன்னும் உணரவில்லையா?

—உன் உடன் தோழனின் வீறு செயல் கண்டாயா?

—தமிழா...! விழி...! எழு...! போர் செய்...!

—அனைத்து அடிமைத்தளைகளையும் வெட்டி வீழ்த்து!

-- புரட்சியாளன்.

இறியூனியன் தீவில் தமிழர்கள்.

ஆங்கிலத்தில் : கே. சச்சிதானந்தன், சீசெல்சு.

தமிழில் : 'ஆலன்'

'இறியூனியன்' ஓர் எரிமலை சூழ்ந்த தீவு. 2510 சதுர அயிரமாத்திரி (Sq. Km) பரப்பும், ஏறத்தாழ 5,50,000 மக்கள் தொகையும் கொண்டது. இந்துமாக் கடலில் மடகாசுகர் தீவுக்குக் கிழக்கிலும், மொரிசியசுக்கு மேற்கிலும் இது அமைந்துள்ளது. 1946 முதலே பிரான்சு நாட்டின் கடல்கடந்த துறையில் அடங்கியுள்ளது. இத் தீவினர் தம் பேராளர்களைத் தேர்ந்தெடுத்துப் பிரெஞ்சு நாடாளுமன்றத்துக்கு அனுப்புகின்றனர். மேலும் இறியூனியனுக்கெனத் தனிச் சட்டப் பேரவையும், நகரங்களில் நகரவைகளும் உண்டு. 1973 முதல் இந்தியப் பெருங்கடலில் பிரெஞ்சுப் படைகளின் தலைமைத் தளமாக இறியூனியன் இருந்து வருகின்றது.

மாந்த இனக் குழுக்கள் அதிகார முறையில் கணக்கிடப் பெறவில்லை; கலத்தாயப் பெறவுமில்லை. இருப்பினும், ஏறத்தாழ 2 இலக்கம் முதல் 2½ இலக்கம் வரையிலான மக்களைக் கொண்ட பெரிய மாந்த இனக் குழுவாகத் தமிழர்களே இருக்கின்றனர். ஏறத்தாழ 75 ஆயிரம் முதல் ஓரிலக்கம் வரை ஆப்பிரிக்கரும், ஓரிலக்கம் ஐரோப்பியர் (முதன்மையாகப் பிரெஞ்சு நாட்டினர்)களும், அவர்களோடு ஆசியக் கண்டத்துச் சீன, அராபிய, இந்தோ—பாக்கித்தானியர்கள் 25,000 பேரும் வாழ்கின்றனர்.

ஐரோப்பியக் குடியேற்ற வணிகர்களுக்கு முன்னமேயே, அராபியரும், தமிழரும், சீனரும், மலாகாசியரும் பெரும்பாலும் இக் கடற்பகுதியில் இறியூனியன் உள்பட எல்லாத் தீவுகளையும் நன்கறிந்த வணிகத் தலைவர்களாக விளங்கினர். எனினும் பிரெஞ்சு நாட்டாரே கி. பி. 1642-இல் முதலில் சென்று குடியேறியதாக அண்மைக் கால வரலாறு கூறுகிறது.

அக் காலத்தில், இந்தியத் துணைக் கண்டத்தில் பிரெஞ்சின் முகாமையான கைப்பற்றல் நிலமாகப் பாண்டிச்சேரி விளங்கியது. அந் நூற்றாண்டின் இறுதிக் காலங்களில் பிரெஞ்சுப் படையில் பணியாற்றிய பத்துப் படை வீரர்கள், புதுச்சேரியிலிருந்து படைத் தலைவர் ஒருவரின் தலைமையில் இறியூனியனில் வந்து தங்கினர். பிரெஞ்சுக்காரர் 1729-இல் பாண்டிச்சேரியிலிருந்து மொரிசியசுக்கும் இறியூனியனுக்கும், பெரிதும் கைத்தொழில் வல்லாரும், வணிகரும் அடங்கிய முதல் தமிழர் குழுவை அழைத்து வந்தனர். அதைத் தொடர்ந்து இறியூனியனுக்குத் தமிழர்கள் அலை-யலையாக வந்தனர்.

Scanned with CamScanner

மக்கள் குழுவின் தனிப்பண்பாட்டினை வளர விடாது, தலைநகர்ப் பண்பாடு போல் தன்வயப் படுத்துவதே இறியூனியனில் பிரெஞ்சு அரசின் கொள்கையாக எப்பொழுதுமே இருந்தது. அதன் விளைவாக இறியூனியன் என்பது இந்துமாக் கடலில் பிரெஞ்சுப் பண்பாட்டின் வளர்ச்சி பெற்ற பகுதி என்றே இன்று கருதப் பெறுகின்றது.

இறியூனியன் தமிழர்கள் பிரெஞ்சு மற்றும் கிரியோல் மொழிகளைப் பேசுகின்றனர். புதுச்சேரியிலிருந்து குடியேறிய தமிழர்கள் சிலர் தமிழ் பேசுகின்றனர். எப்படியிருப்பினும் மொரீசியசு தமிழர்களைப் போலவே நூற்றுக்கு மேற்பட்ட ஆண்டுகளாகத் தாம் கொண்டுள்ள தம் மத நம்பிக்கைகளையும் பண்பாட்டுப் பிடிப்புகளையும் காத்து வருகின்றனர்.

அங்குக் குடியேறி, அனைவரும் கத்தோலிக்கக் கிறித்துவராக மாறவேண்டுமென வற்புறுத்தப் பெற்றனர்; பிறப்புப் பதிவுக்கு ஒரு கிறித்துவப் பெயர் தந்தாக வேண்டும். எனினும் உயிர்ப்பலி மற்றும் அது தொடர்பான பிற நம்பிக்கைகளால் சிறிய தமிழ்க் கோயில்களைக் கட்டினர். ஐயனார், காளி, மாரியம்மன் போன்ற கடவுள்கள் அவர்களை ஒற்றுமைப் படுத்தின. சிலர் பொதுவான கோயில்களைக் கட்டினர். **இந்து என்ற சொல் அவர்களுக்குத் தெரியாதாகையால் அவர்கள் தாம் கட்டிய கோவில்களைத் 'தமுள்' கோயில்கள் என்றழைத்தனர்.**

வெள்ளிக் கிழமைகளிலும், விழா நாள்களிலும் கோயில்களுக்குச் சென்றனர். ஞாயிற்றுக் கிழமைகளில் கத்தோலிக்கத் திருக்கோயில்களில் வழிபட்டனர்; தங்கள் குழந்தைகளுக்குக் கிறித்தவப் பெயரிட்டனர்; அக் கோயில்களிலேயே திருமணம் நடத்தினர்; இறந்தவர்களைப் புதைத்தனர். கிறித்தவக் கோயில்களின் நடைமுறைகளையும் குமுக மதிப்பினையும் ஏற்றனர்; பெரும்பாலோர் நெஞ்சத்தால் தமிழராகவும், கோவில்களில் வாழும் நாட்டினராகவும் இருந்தனர். பிரெஞ்சு மொழியின் ஒலியியலுக்கு ஒத்த எழுத்துகளில் தமிழ்ப் பெயரைக் கொண்டிருந்தனர்.

தமிழ் நாட்டிலிருந்த தம் இனத்துடனும் உறவினருடனும் தொடர்பை இழந்தனர். அவர்களைப் பிரெஞ்சுப் பண்பாட்டுடன் முழுவயப் படுத்த வேண்டும் என்ற உறுதியோடு செயல்பட்ட பிரெஞ்சு நாட்டினர், தமிழ்வழித் தொடர்பு அனைத்தையும் துண்டித்தனர். அத் தமிழர்கள், அண்டையில் மொரீசியசிலும், சீசெல்சிலும் வாழ்ந்த தத்தம் சொந்தச் சூழலில் பிறவயத் தாக்கத்திற்கே உட்பட்டிருந்த தமிழர்களோடு மட்டுமே தொடர்பு கொண்டிருந்தனர்.

கன்னி(புரட்டாசி) மாத நோன்பு, வழிபாடுகள் விழா நிகழ்ச்சிகள் வழி, தமிழர்கள் அனைவரை

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம் அதிகாரத் திமிரைக் காட்டி வரும் கொடுவினை (பாசிச) (எம். சி. ஆர்.), பாண்டியனின் கும்பல், 'வணிக ஒற்றுமை' ஆசிரியர் பால்ராசைச் சிறையிலடைத்தும், அவர் மகனைக் கடத்திச் சென்றும், இக் கால் 'ஆனந்தவிகடன்' பாலசுப்பிரமணியத்தின் மீது எடுத்த நடவடிக்கைகளும் இவர்கள் செயலை அம்பலப்படுத்திக் காட்டுகின்றன.

இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர்கள் நீக்கம் ஏதோவொரு சட்ட எரிப்புப் போராட்டத்தின் வெளிப்பாடு மட்டுமன்று; மக்களுக்காக இல்லாத இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களும் சரி, அதைக் கட்டிக் காக்கும் இந்தக் கொடுமுறை (பாசிச)க் கும்பலும் சரி, இவை இருக்கும் வரையிலும் இம் மாதிரிச் சிக்கல்களும் தொடரும். இந்த அரசியல் அமைப்பியல் என்பது எக்காலத்திலும், மக்கள் மீது அக்கறை கொண்டவர்களாலோ, பெரும்பான்மை மக்களின் படிநிகராளிகளாலோ உறுதி செய்யப் பட்டதில்லை. எனவே, இப்பொழுதுள்ள பாராளுமன்ற அமைப்பு இருக்கும்வரை—மக்களால் தேர்ந்தெடுக்கப் படுபவர்களுக்கு நடைமுறைப் படுத்தும் அதிகாரம் இல்லாதவரை—மக்களுக்கான அரசியல் சட்டம் என்பது கற்பனையான ஒரு செய்தித் தொகுப்பே!

ஆகவே, இந்த அமைப்பு முறை முற்றிலுமாகத் தகர்க்கப்பட்டுப் பெரும்பான்மை மக்கள் நலனில் அக்கறை கொண்ட பிரிவினர்களிலிருந்து தோன்றும் அமைப்பு முறைகளே மக்கள் நலனை எதிரொலிக்கும் சரியான அரசியல் சட்டம் வகுக்க இயலும். அப்போதுதான் ஒவ்வொரு குறிப்பிட்ட இனத்துக்குரிய உரிமைகளுக்கும் செயலுறுதி அளிக்கவியலும்.

இல்லையேல், 'புனிதம்' 'மரபுவழிப் பட்டது' என்னும் பேர்வழிகளால் (வல்லரசுகளின் கைக் கூலிகள், பணமூட்டைகள், குமுகாயக் கழிசடைகள், இவர்களைக் காக்கும் கொடுமுறை வன்மையாளர்கள் [Fascists]) இச்சட்டங்கள் பாதுகாக்கப் பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

—*நம் சிறப்புச் செய்தியாளர்.*

(மூன்.பத்தித் தொடர்ச்சி)

யும் ஒன்றிணைக்கும் சிறப்புக் கூறாக இருந்தது "கோவிந்தன் விழா". நான்கு புனிதக் காரி (சனி)க் கிழமைகளில் நோன்பு கடைப்பிடிக்கப் பெற்றது. நோன்பு முடிவு 'கடைக்கிழமை' (அம் மாத நாலாம் காரிக்கிழமை)யில் நிகழ்ந்தது. மொரீசியசிலும் இறியூனியனிலும் 'கோவிந்தன் விழா' தமிழர்களிடையே சிறப்பாக நடைபெற்றது. இறியூனியன் முழுவதிலும் சுறவக்கழைமீன் (தைப் பூசம்) நாளிலும், மேழமீன்(சித்திரை) நாளிலும் காவடி எடுத்தல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

—(தொடரும்)

கருத்தரங்கை வரவேற்று வாழ்த்திய நெஞ்சங்கள்!

43. நிகழ்ச்சி சிறப்புற விழைவு.

மதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு, வணக்கம். கருத்தரங்க அழைப்பு கிட்டியது; நன்றி. வரவியலாச் சூழல். நிகழ்ச்சி சிறப்புற என் விழைவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன், - **ந. கவுதமன்**, கோவை

44. தலையாய முயற்சி!

அன்பின் பேராசான் ஐயா! வணக்கம். தங்கள் எண்ணப்படியே 25 ஆண்டுகள் முடிந்த பின்னரும் அஞ்சா நெஞ்சுடன் பறையறைந்து, தமிழ் நாட்டின் விடுதலையை அறிவித்து விட்டோம். இனிதான் செயலே தொடங்கவுள்ளது. அணியப் படுத்துவோம். தங்கள் உலையா முயற்சிக்கு என்றும் உறுதுணையாவோம்...

எல்லோரும் எழுதவும் பேசவும் ஏன் எண்ணவும் கூட அங்கங்கே அஞ்சியொடுங்கும் நெஞ்சினராய் அரசியலில் மறைந்தொழுகும் இந் நாளில் தலைநகரில் முழக்கமிட்டுத் தனிநாடு கொள் முயற்சி தனிப் பெரும் செயல் எனப் பகைவரும் ஒப்புவர். வெல்வோம் விரைந்து!

புலவர் **குமர. தன்னொளியன்** க.மு., கல்.இ., வேலூர்.

45. ஒருவகையில் உங்களுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்!

நீங்கள் அன்று கருத்தரங்கில், பெரியார் கொள்கைகளில் தனித்தன்மையுடன் இருந்தது 'தனித்தமிழ்நாட்டுக் கொள்கை' ஒன்றுதான் என்று விரிவுரை செய்தீர்கள். அந்தத் தனித் தமிழ்நாடு மலரவே இந்தக் கழகம் இருப்பதாகவும் குறிப்பிட்டீர்கள். ஒருவகையில் உங்களுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும். ஏனென்றால் தனித்தமிழ் நாட்டுக் கொள்கைக்காவது பெரியாரைப் பின்பற்றுவதற்கு.

—**மு. செல்லப்பன்**, சென்னை-53.

46. தங்கள் தமிழ்ப்பணி சிறக்க வேண்டும்.

கருத்தரங்கிற்குவரவேண்டுமென்றுதான் நம்பிக்கையோடு இருந்தேன். கடைசி நேரத்தில் தவிர்க்க முடியாத கரணியங்களால் வரவியலாமற் போய்விட்டது. மன்னிக்கவும்...தங்கள் தமிழ்ப் பணி சிறக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

—**சி. பூ மணி**, பெங்களூர்-21.

47. உங்கள் முயற்சி வெற்றி பெறும்!

கருத்தரங்கு இனிதே நடந்தேறியது என்பதைத் 'தமிழ்நிலம்' வழியறிந்து மிகவும் மகிழ்ந்தேன். உங்கள் முயற்சி வெற்றி பெற்றே தீரும். தனித்தமிழ் நாடு அடைவது உறுதி... நல்வாழ்த்துகள். தூங்கள் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து இந்த அடிமைத் தமிழ் நாட்டை மீட்டெடுக்க வேண்டுகிறேன்.

—**சீத்தலைச் சாத்தனார்**, உ. செல்லூர் (தெ. ஆ.)

48. நாமும் சிந்திக்க வாய்ப்பு ஏற்படும்.

...அழைப்பிதழ் காலந்தாழ்ந்து கிடைத்தமையால் கருத்து எழுதியனுப்ப இயலாததாயிற்று. அன்பு கூர்ந்து பொறுத்துக் கொள்ளுங்கள். கருத்தரங்க முடிவு தெரிந்தால் நாமும் சிந்திக்க வாய்ப்பு ஏற்படும்...

—**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**, குன்றக்குடி.

49. நம் கொள்கை வெல்லும்!

...தமிழின விடுதலைக்காக என் ஒப்போலையை முன்பே அனுப்பி விட்டவன் யான். நாடு, இனம், மொழி எனும் முப்படிக் கொள்கைக்கே ஒப்படைத்துக் கொண்ட என் உணர்வுகள் தங்கள் கொள்கை வழி பீடு நடை போடும் என்பது உறுதி. உலகத் தமிழின் உயர்வுக்கும் வாழ்வுக்கும் ஓயாமல் நடையிடும் தங்கள் துணிவுக்கும் வினைப்பாட்டிற்கும் தலை வணங்கி,

ஒருநாளில் நம் கொள்கை வெல்லும்—ஆம்
உலகெல்லாம் நம்புகழைச் சொல்லும்!
திருநாள்தான் அதுவென்றே போற்றும்!—தமிழ்த்
தேயத்தார் நலிவெல்லாம் மாற்றும்!

—என்று வாழ்த்துப்பாடி முடிக்கின்றேன். நன்றி.

—புலவர் **திருக்குறள் நாவை சிவம்**, மணப்பாறை.

50. கருத்தரங்கால் தமிழனை முன்னேற்றிவிட முடியுமா?

'...கருத்தரங்கு நடைபெற்றமை மகிழ்ச்சியே', வெறுமனே கருத்தரங்கு நடத்திக் கொண்டிருப்பதால் மட்டும் தமிழனை முன்னேற்றிவிட இயலுமா? ஈழத் தமிழனுக்கு இதுவரை நாம் செய்தது என்ன? வெறும் வாயளவில் கொடுத்துக் கொண்டிருந்த ஆதரவு கூட இன்றில்லை. ஈழத்தமிழன்தான் நமக்கு வழிகாட்டி.

தென்மொழிக்குத் தனிக் கொள்கை என்று இயக்கம் தொடங்கிய தாங்கள் இப்பொழுது திராவிட இயக்க வழியைப் பின்பற்றுவது ஏன்? இதேபோன்றுதான் அன்று அவர்களும் தேர்தலில் நின்று அதிகாரத்தைப் பெற்றுத் தமிழினத்தை முன்னேற்றப் போகிறோம் என்று கூறிப் பொதுக் கருத்துத் தேர்வு நடத்தினர். அதிகாரத்திற்கு வந்தபின் தமிழினம் முன்னேற்றம் பெற்றதா? எனவே, '**கொள்கையற்ற நடைமுறை குருட்டுத் தனமானது; நடைமுறையற்ற கொள்கை மலட்டுத் தனமானது**' என்னும் கருத்தை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும் என்பதுதான் என் எண்ணம்.

—**கி. வெற்றிச் செல்வன்**, தங்கவயல்.

(தொடரும்)

Scanned with CamScanner

இவன்தான் தமிழன்!

—பாவலர் இளஞ்சித்திரன்.

இவன்தான் ஐயா இன்றைய தமிழன்!
இவன்தான் ஐயா இன்றைய தமிழன்!

நாவழி மேடைப் பேச்சார வாரம்;
நல்லசிற் றரசன் போல்பரி வாரம்!
காவடி தூக்கியே தில்லிக்கு மேளம்!
கட்டளைப் படியே போடுவான் தாளம்! (இவன்)

தேர்த்திரு விழாப்போல் வேடிக்கை வாணம்;
திரைப்படக் காட்சிபோல் அரங்குகள் கோணம்!
பார்த்திடும் பரப்பெலாம் பால்ஒளிக் குழல்கள்!
பகட்டிவன் வீரம்! விளைவெலாம் விழல்கள்! (இ)

வடமலர் மாலைகள் தோள்கள் தாங்கும்!
மலர்மகு டங்களில் மகிழ்ந்துளம் தூங்கும்!
இடந்தொறும் நாள்தொறும் தேருலா போவான்!
இந்தப்பொய்க் கோலப் பெருமையில் சாவான்!

ஆயிரம் ஆயிர மாகக் கூடுவான்!
அரைக்கா சுக்கும் பயனிலா தாடுவான்!
வாயுர நாடக மேஇவன் தொண்டு!
வளையினுள் ஓடிடும் இவனொரு நண்டு! (இவன்)

ஊர்ப்புறம் போக்கு நிலம்போல் கிடப்பான்!
ஒருவழி ஒருநினை வில்லாது நடப்பான்!
ஆர்ப்பரிப் பிருக்கும்; ஆட்டம்! பாட்டம்!
அதிலே யேஇவன் வாழ்நாள் ஓட்டம்! (இவன்)

சாதிகள் தாங்கிடும் தற்குறி மூடன்!
தன்னினம் தின்னியாம் இவனொரு கேடன்!
வீதியில் 'தமிழ்வாழ்க!' என்றே கத்துவான்!
வீட்டில் வினைகளில் பிறமொழி நத்துவான்! (இ)

தமிழ்வழி இயங்கும் தன்மையே இல்லான்!
தான்தமிழ்க் குழைப்பதாய்ப் பொய்சொலும்
பொல்லான்!
தமிழினப் பேச்சி லேகுளிர் காய்வான்!
தன்னைமுன் வைத்தின விளைச்சல் மேய்வான்!

ஒருவனுக் கொருவன் வாங்கலாய் இருப்பான்!
உடனிருப் பாரின் கழுத்தையும் அறுப்பான்!
ஒருபொதுச் சிந்தனை, ஒற்றுமை அறியான்!
ஓங்கிய கைகளைக் கும்பிட்டுத் திரிவான்! (இ)

மதப்புதை சேற்றில் எருமையாய்க் குளிப்பான்!
வந்தவர் போனவர்க் கெலநம்பல் இளிப்பான்!
கதவுகள் திறந்துவைத் தெவரையு மழைப்பான்!
கைகளின் விலங்கினைப் பொன்னினில்
இழைப்பான்! (இவன்)

வடவனின் கால்களைக் கண்களில் ஒத்துவான்!
மண்டியிட் டவன்முனம் வாயினைப் பொத்துவான்!
தடவரைத் தோள்களால் பல்லக்குத் தூக்குவான்!
தன்னையே விற்றுடல் வளர்த்துயிர்
போக்குவான்! (இவன்)

அடிமைக் கடிமையாய் எவர்க்கும் உழைப்பான்!
ஆடைக்கும் சோற்றுக்கு மேஇவன் பிழைப்பான்!
குடிமை, மானம் இவனுக்குப் பகையே!
கோதிலாத் தமிழ்க்கிவன் மகனெனல் நகையே!

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 4
உரிமை மீட்புக்கு உயிர்தான்
விலையெனில் பரிவுடன் அதனையும்
பரிமாறிடுக!

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண். 85 TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.